# பத்திரிக்கை செய்தி

தஞ்சாவூர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் தஞ்சாவூர் வட்டாரத்தில் சூரக்கோட்டை களப்பகுதியிலும், ஒரத்தநாடு வட்டாரத்தில் ஒக்கநாடு கீழையூர் களப்பகுதியிலும், பாபநாசம் வட்டாரத்தில் கணபதி அக்கஹாரம் களப்பகுதியிலும், கும்பகோணம் வட்டாரத்தில் பட்டீஸ்வரம் களப்பகுதியிலும், பூதலூர் வட்டாரத்தில் மைக்கேல்பட்டி களப்பகுதியிலும், மற்றும் மதுக்கூர் வட்டாரத்தில் மோகூர் களப்பகுதி ஆகிய வட்டாரங்களில் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பில் காலியாக உள்ள 6 தொகுப்பு ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடம் நிரப்பப்படவுள்ளது.

தஞ்சாவூர், ஒரத்தநாடு, பாபநாசம், கும்பகோணம், பூதலூர் மற்றும் மதுக்கூர் ஆகிய வட்டாரங்களில் தகுதியுடைய மகளிர் சுய உதவிக் குழவினை சேர்ந்த மகளிர் மட்டும் விண்ணப்பிக்கலாம் வயது 21 முதல் 45 க்குள் உடையவராய் கல்வி தகுதி குறைந்தபட்சம் 12வது தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதற்கு மேல் பட்டப்படிப்பு மற்றும் கணினி இயக்க தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மகளிர் சுய உதவிக்குழுவில் உறுப்பினர்களாகவும் மற்றும் 2 ஆண்டுகள் ஊக்குநர் அல்லது பிரதிநிதியாக பணியாற்றிய அனுபவமும், மேலும் கைபேசி இயக்கத் தெரிந்தவராகவும், குறுஞ்செய்தி (SMS) அனுப்புதல் மற்றும் பெறுதல் ஆகியவை அறிந்தவரரகவும் பணிநிமித்தமாக வட்டார பகுதிகள் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகிற்கு செல்ல வேண்டியிருந்தால் சென்று வர விருப்பம் உள்ளவராக இருத்தல் வேண்டும். இருசக்கர வாகனம் ஓட்ட தெரிந்த உரிமம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்காணும் தொகுப்பு ஒருங்கிணைப்பாளர் பணியிடம் முற்றிலும் தற்காலிகமானது பணி செய்யும் மாதம் ஒன்றுக்கு ரூ.7500/- மட்டுமே ஊதியம் வழங்கப்படும். இப்பதவிக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள் 24.04.2017 தேதிக்குள் கல்வி தகுதி மற்றும் மகளிர் சுய உதவிகுழு விவரங்களுடன் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் பரிந்துரையுடன் திட்ட இயக்குநர், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு(மகளிர் திட்டம்), மாவட்ட ஆட்சியரகம், அறை எண்:223, இரண்டாவது தளம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு விண்ணப்பித்திட தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகுதிகள் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாவட்ட அளவிலான எழுத்து தேர்வின் மூலம் தேர்வு செய்யப்படும்.

மேலும் விபரங்களுக்கு மாவட்ட இயக்க மேலாண்மை அலகிற்கு **04362 - 277907** என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்

17/4/17